8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

129. 1982–83ஆம் ஆண்டில் தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

130. 1982–83ஆம் ஆண்டில் பட்டுவளர்ச்சித் துறை பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

131. ''தமிழகத்தில் பட்டுத் தொழில்'' என்கிற சிறு புத்தகம் (தமிழ்).

132. கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1982–83 (தமிழ், ஆங்கிலம்).

133. கோரிக்கை எண் 14—தமிழ்நாடு சிறைகளின் நிர்வாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1982–83 (தமிழ் ஆங்கிலம்).

134. கோரிக்கை எண் 23—கூட்டுறவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1982–83 (தமிழ், ஆங்கிலம்).

135. ''தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்''—வங்கியின் வளர்ச்சி பற்றிய சிறு குறிப்பு—31–12–1981-ல் உள்ளபடி (தமிழ், ஆங்கிலம்).

136. ''தமிழகத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கிகள்'' என்ற புத்தகம் (தமிழ், ஆங்கிலம்).

137. ''தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியின் பணிகள்'' பற்றிய குறிப்பு, 30–6–1981-ல் உள்ளபடி (தமிழ், ஆங்கிலம்).

138. ''தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்'' பற்றிய குறிப்பு. 1981–82 (தமிழ், ஆங்கிலம்).

139. ''உழவர்களின் நண்பன் டான்ஃபெட்—தமிழக உழவர்களுக்கு ஒரு கூட்டுறவு நிறுவனம்'' என்ற புத்தகம் (தமிழ் ஆங்கிலம்).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1982 மார்ச் 20

140. ''சிறுதொழில்களுக்கு சிட்கோவின் சிறப்பான சேவை —1982'' என்கிற சிறு புத்தகம் (தமிழ்).

141. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77, 1977–78ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளில் சில துறைகளுடன் தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் 16ஆவது அறிக்கை (ஏழாவது பேரவை).

இணைப்பு I.

(5ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 582—க்கான விடையைக் காண்க.)

(1) பத்து அல்லது பதினைந்து அடி உயரம் வளர்ந்த பல நிறங்களில் பூத்துக்குலுங்கும் மரங்களையும், தென்னை மரங்களையும்; கடற்கரைக்கு எழிலூட்டும் வகையில் மறு நடுவை செய்தல். (By Burlapping Method)

(2) சீரணி அரங்கத்தில் கல்வி சம்பந்தப்பட்ட படக்காட்சிகளும் கார்டூன் படக்காட்சிகளும் காட்டுவதற்கு ஏற்பாடு செய்தல் ;

(3) சீரணி அரங்கத்திலிருந்து வெளியே செல்ல மணலின் நிறத்தோடு பொருந்தும் நிறத்தில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைத்தல் ;

(4) திறந்த வெளி சிற்றுண்டிச் சாலைகள் நடத்துதல் ;

(5) திறந்த வெளி உடற்பயிற்சிச் சாலை ஒன்றினை ஏற்படுத்துதல் ;

(6) கடற்கரை மணற்பரப்பில் அழகிய வடிவமைக்கக்கூடிய குப்பைத் தொட்டிகளை வைத்தல் ;

(7) கட்டுமரங்கள் மற்றும் மீன்பிடிக்கும் வலைகளை மெரினாவுக்கு வரும் பொதுமக்களுக்கு இடைஞ்சல் ஏற்படாத வகையில் குறிப்பிட்ட சில இடங்களில் வைக்க ஏற்பாடு செய்தல்.;

(8) மணற்பரப்பை அசுத்தம் செய்வோர் மீது நடவடிக்கை எடுக்கவும் மணற்பரப்பை தூய்மையான நிலையில் பராமரிக்கவும் ஓர் துப்புரவு ஆய்வாளரை நியமித்தல் ;

(9) மணற்பரப்பை அசுத்தம் செய்வோருக்குத் தண்டனை வழங்க ஓர் நடமாடும் நீதிமன்றத்தை ஏற்படுத்துதல் ;